**STC.No.269/2024** Dt: 29.11.2024

சாட்சி மீண்டும் ஆஜராகி எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of November 2024.

29.11.2024

புதா.சா.1– லிங்கம், த/பெ. வேலு

(எதிரி ஆஜர்).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** நான் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் மதுரை அரசு சட்டக்கல்லூரில் 2002 முதல் 2007 வரை 5 ஆண்டு சட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் தொடக்கப்பள்ளி படிப்பை எனது சொந்த ஊரான இளஞ்செம்பூரிலும், மேல்நிலைப்படிப்பை கமுதி ஷத்திரியநாடார் மேல்நிலைப்பள்ளில் படித்தேன். நான் வழக்கறிஞராக 2021ம் பதிவு செய்தேன். 2021ம் வருடம் முதல் நான் முதுகுளத்தூர் நீதிமன்றத்தில் தான் தொழில் செய்து வருகிறேன்.

2) நான் வழக்கறிஞராக தொழில் செய்தபின்பு நான் வேறு தொழில் செய்யவில்லை. 2007 முதல் 2021 வரை நான் துணிகளை ஏற்றுமதி செய்யும் தொழில் செய்து வந்தேன். எனக்கு திருமணம் முடிந்து 2 குழந்தைகள் உள்ளனர். எனது மனைவி செவிலியராக பணி புரிந்து வருகிறார். எனது மகன் 12ம் வகுப்பும் மகள் 6வது வகுப்பும் படித்து வருகிறார்கள்.

3) எதிரி எனக்கு ரத்த உறவு கிடையாது என்றால் சரிதான். எனது மாமனார் மூலமாக எதிரி பழக்கம். எனது மாமனாரின் வீட்டில் அடுத்த Compound வீடு.

எதிரியும் நானும் வேறு வேறு சமூதாயம் என்றால் சரிதான். எனது மாமனார் பெயர் நயினார். சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க இயலாது என்ற சட்ட முதுமொழி எனக்கு தெரியாது. என்னிடம் நிரந்தர கணக்கு எண் உள்ளது. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023 ஆண்டிற்கான வருமான நான் தாக்கல் செய்து அதற்கான இருப்பு நிலை அறிக்கை என்னிடம் உள்ளது என்றால் சரிதான்.

4) அந்த இருப்பு நிலை அறிக்கையில் யார் யாரிடம் எவ்வளவு கடன் கொடுத்துள்ளேன் மற்றும் எவ்வளவு வருமானம் வந்தது என்ற விவரம் காணப்படும் என்றால் இல்லை. இருப்பு நிலை அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வருமான வரி படிவம் 3ல் தாக்கல் செய்யப்படும் என்றால் தெரியாது எனது கணக்காயர் தான் எனது வரவுசெலவுகளை பார்த்து வருகிறார்.

5) எனக்கு எந்தெந்த வங்கில் கணக்குகள் உள்ளது என்றால் முதுகுளத்தூர் SBI கிளை வங்கி, முதுகுளத்தூர் IOB கிளை வங்கி , முதுகுளத்தூர் TMB கிளை வங்கி, சாயல்குடி IOB கிளை வங்கி, முதுகுளத்தூர் Canara Bank கிளை வங்கி, இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு கடலாடி மற்றும் முதுகுளத்தூர் வங்கி, மதுரை KVB, KK Nagar கிளை வங்கி, பரமக்குடி ICICI கிளை வங்கி மேற்படி கண்ட அனைத்து வங்கி கணக்குகளும் சேமிப்பு வங்கி கணக்குகளாகும். பரமக்குடி ICICI கிளை வங்கியில் நடப்பு கணக்கும் உள்ளது. மேற்கண்ட வங்கி கணக்குகளின் கணக்கு எண் எனக்கு தெரியுமா என்றால் முதுகுளத்தூர் SBI கிளை வங்கி, முதுகுளத்தூர் TMB கிளை வங்கி கணக்கு எண் மட்டும் தான் தெரியும்.

6) மேற்படி அனைத்து வங்கி கணக்குகளின் கணக்கு புத்தகங்களை

என்னால் தாக்கல் செய்ய இயலும். 2017ம் ஆண்டு பண மதிப்பிழப்பு ஏற்பட்டபோது மேற்கண்ட அனைத்து வங்கி கணக்குகளின் விவரங்களையும் என்னால் தாக்கல் செய்ய முடியும். மேற்படி அனைத்து வங்கி மேளாலளர்களை விசாரணை செய்வதற்கு எனக்கு எந்த ஒரு ஆட்சேபணையும் இல்லை. நகைகடன் அல்லது தனிநபர் கடன் இருக்கிறதா என்றால் நகைகடன் மட்டும் தற்போது உள்ளது. நகைக்கடன் சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன்.

7) மாதத்தவனைகள் ஏதேனும் கடன் வைத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு 4 வீடுகள் உள்ளது. நான் தற்போது கதவு எண்.01, மன்னன் தெரு, முதுகுளத்தூரில் வசித்து வருகிறேன். மேற்படி 4 வீடுகளின் விவரங்களையும் என்னால் தாக்கல் செய்ய முடியும். என்னிடம் ஒரு இருசக்கர வாகனம் மற்றும் ஒரு நான்கு சக்கர வாகனமும் உள்ளது. எனது மனுவிலோ, எனது பிரமான வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ நான் மேற்படி முகவரி வசித்து வருவதாக கூறவில்லை என்றால் சரிதான். நான் எனது சொந்த வீட்டின் முகவரியை தான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன்.

8) வருமான வரி சட்டம் 1961 பிரிவு 269 SS–ன் படி உறவினர் அல்லாத வேறு நபர்களுக்கு ரூ.20,000/–க்கு மேல் ரொக்க கடன் அளிக்க கூடாது என்ற விவரம் எனக்கு வழக்கறிஞர் என்ற முறையில் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு கொடுக்க வேண்டும் என்றால் காசோலையாகவோ, வரைவோலையாகவோ கொடுக்க வேண்டும் என்பது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வருமான வரி சட்டம் 1961 பிரிவு 269 SS–ன் படி கடன் அளித்தால் வருமான வரி சட்டம் 1961 பிரிவு 271–ன் படி ரூ.20,000/–க்கு மேல் செலுத்தக்கூடிய தொகை மற்றும் அதே தொகைக்கு

ஈடாக அபராத வரியுடன் வருமான வரி செலுத்த வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

9) இந்த வழக்கை பொறுத்தவரை ரூ.17,50,000/- மற்றும் ரூ.87,500/- அரசுக்கு வருமான வரி செலுத்தி இருக்க வேண்டும் என்றால் தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனு, பிரமான வாக்குமூலம் மற்றும் எனது சாட்சியம் ஆகிவற்றை எடுத்து வருமான வரிதுறைக்கு அனுப்ப எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

10) எனது மாமனார் நயினாருக்கு ஒரு மகன் ஒரு மகள் உள்ளார்கள். நயினாரின் மகளின் மாமனார் பெயர் ஐ.சோமசுந்தரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நயினாரின் வீட்டிற்கு மாதம் இரண்டு முறை திருநெல்வேலி செல்வது வழக்கம். திருமணம் வருடம் எனக்கு தற்போது சரியாக நினைவில் இல்லை சுமார் 15, 16 வருடங்கள் இருக்கும். திருநெல்வேலியில் இருந்து முதுகுளத்தூர் சுமார் 140 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக பயண நேரம் 3 மணி நேரம் ஆகும் என்றால் நான் ஒன்றரை மணி நேரத்தில் சென்றுவிடுவேன்.

11) நயினார் தியாகராஜ நகர், தாமிரபதி காலனி, சங்கரமடம் அருகில் வசித்து வருகிறார் கதவு எண் தெரியாது. நயினார் வாடகை வீட்டின் மாடியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். வடகை வீட்டின் உரிமையாளர் கோட்டிமுத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோட்டிமுத்துவின் மகன் மணிகண்டன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரிய நயினார் வாடகை வீட்டில் சுமார் 15 வருடங்களாக வசித்து வந்தார். எனது மாமனார் நயினார் வீட்டிற்கு வரும்போது தான் எதிரி எனக்கு பழக்கம் என்பதுதான் எனது வழக்கு என்றால் சரிதான். எதிரி எனது மாமனாரின் பக்கத்து காம்பவுண்டில் தான் வசித்தபோது தான் எனக்கு தெரியும்.

12) நயினாரின் வீடு கிழக்கு நோக்கி உள்ளது. நயினார் வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் எதிரி வசித்து வந்தார். நயினார் 21.02.2024ம் வருடம் இறந்துவிட்டார். எனக்கு எதிரியை சுமார் 15 வருடங்களாக தெரியும். எதிரி கிராம செவிலியராக பணிபுரிந்து வந்தார். எதிரியின் கணவர் பெயர் உலகநாதன். எதிரிக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். எதிரி என்ன வேலை பார்த்து வருகிறார் என்பதை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான்.

13) எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்ற விவரங்களோ அவரது குடும்ப விவரங்களோ எனக்கு தெரியாது என்பதால் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ கூறவில்லை என்றாலும் பின்னிட்டு தெரிந்து கொண்டு தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் வீட்டில் வந்து பணம் பெற்றுக்கொண்டார் என்பது தான் வழக்கு எனது என்றால் சரிதான். எனது மாமனார் நயினாரும் உடன் வந்திருந்தார். எனது மாமனார் எதிரிக்கு நான் பணம் கொடுக்கும்போது வந்ததாக எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல.

14) எதிரி எத்தனை முறை என்னிடம் பணம் கேட்டார் என்ற விவரத்தை எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரி எந்தஎந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்று புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் 24.03.2021ம் தேதி என்னிடம் பணம் கேட்டதாக கூறியுள்ளேன். எதிரி எப்போது வந்தாலும் எனது மாமனார் நயினாருடன் தான் வருவார். எதிரி என்னிடம் பணம் வாங்க வரும்போது எவ்வாறு வந்தார் என்றால் எனது மாமனார் காரில் வருவார். எனது மாமனார் காரின் வாகனத்தின் பதிவு எண் தெரியாது. எதிரி எனது மாமனருடன் காரில் வந்து பணம் கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல.

15) நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும்போது எதிரியுடன் யார்யார் உடன் இருந்தார்கள் என்றால் எனது மாமனார், கார் ஓட்டுநர் மற்றும் எதிரி ஆகியோர்கள் இருந்தார்கள். வாடகை வாகனம் என்பதால் ஓட்டுநர் பெயர் தெரியாது. நான் கொடுத்த பணம் வருமான வரிக்கு உட்பட்டது என்றால் நான் காதணி விழா மூலம் எனக்கு கிடைத்த பணத்தை கொடுத்தேன். ஒரு தனிநபர் ரூ.5,00,000/-க்கு மேல் வருமானம் ஈட்டினால் வருமான வரி செலுத்த வேண்டும் என்றால் எனது கணக்காயருக்கு தான் தெரியும்.

16) நான் எதிரிக்கு கொடுத்ததாக குறிப்பிடும் தொகைக்கு நான் வருமான வரி செலுத்திருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கையில் வைத்திருந்த பணம் மற்றும் காதணி விழா மூலம் கிடைத்த பணம் ஆகியவற்றை தான் எதிரிக்கு கொடுத்தேன் என்பது எனது வழக்கு என்றால் சரிதான். எனது சமூதாய வழக்கப்படி காதணி விழா என்பதை பெரிய விழாவாக விமர்சியாக கொண்டாடுவோம் என்றால் சரிதான். காதணி அழைப்பிதல் அச்சடித்து உறவினர்களுக்கு கொடுப்போம் என்றாலும் அவ்வாறு தான் காதணி விழா நடந்தது என்றாலும் சரிதான்.

17) காதணி விழாவிற்கு எனது உறவினர்கள் மற்றும் வெளியூர் உறவிர்களும் வந்தார்கள் என்றால் சரிதான். சுமார் ரூ.2,00,000/- செலவு ஆனது. நான் 1300 பத்திரிக்கை அச்சடித்து கொடுத்தேன் சுமார் 900 நபர்களுக்கு மேல் விழாவில் கலந்து கொண்டார்கள். காதணி விழா 29.04.2021ம் தேதி நடைபெற்றது. எனது சமூதாய வழக்கப்படி மொய் பணத்தை நோட்டில் வரவு வைப்போம் என்றால் சரிதான். மேற்படி நோட்டில் வரவு வைப்பதற்கு காரணம் மீண்டும் மொய் செய்தவர்களுக்கு திருப்பி மொய் செய்வதற்கு என்றால் சரிதான். மேற்படி மொய் நோட்டில்

யார்யார் எவ்வளவு பணம் மொய் கொடுத்தார்கள் என்ற விவரம் இருக்கும் என்றால் சரிதான்.

18) எனது வீட்டில் காதணி விழா நடைபெற்றதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். நான் கையிருப்பாக எவ்வளவு பணம் வைத்திருந்தேன் என்பதையோ காதணி விழா மூலம் எவ்வளவு மூலம் கிடைத்தது என்பது குறித்து எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் பணத்தை குறிப்பிட்டு கூறவில்லை. நான் கூறுவதுபோல் காதணி விழா நடைபெற்றிருந்தால் எந்த தேதியில் நடைபெற்றது என்தையும் அதன் மூலம் எவ்வளவு பணம் கிடைத்தது என்பதையும் நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ கூறியிருப்பேன் என்றால் சரியல்ல.

19) 2020 மார்ச் மாதம் முதல் 2021 ஜனவரி மாதம் வரை இந்தியா முழுவதும் கொராணா பெருந்தொற்று முதல் அலையும், இரண்டாவது அலை 2021 மார்ச் முதல் அடுத்த மூன்று நான்கு மாதங்கள் உச்சத்தில் இருந்தது என்றால் சரிதான். எங்கள் மாவட்டத்தில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தளர்வுகள் இருந்ததாலும் நான் மூன்று மாதங்களுக்கு விழா வைப்பதற்கு நாள் குறிக்கப்பட்டதாலும் விழா நடைபெற்றது. முதன்முதலில் இந்தியாவில் 22.03.2020ம் தேதியில் இருந்து 31.03.2022 வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

20) 2021ம் ஆண்டு மார்ச் மாதம் இறுதியில் கொராணா பெருந்தொற்று தமிழ்நாடு மாநிலத்தில் பேரழிவு ஏற்படுத்தியது என்றும் மருத்துவமனைகளில் படுக்கை மற்றும் ஆக்சிஜன் வசதிகள் இல்லாமல்

பொதுமக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி காலக்கட்டத்தில் தனியார் மற்றும் அரசு போக்குவரத்து அனைத்தையும் தமிழக அரசு நிறுத்தி வைத்திருந்தது என்றால் எங்களது மாவட்டத்தில் தளர்வுகள் இருந்தது. மேற்படி கொராணா காலக்கட்டத்தில் ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கு செல்வதற்கு மின்னணு கடவுச்சீட்டு மூலமாகதான் செல்லமுடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

21) 13.05.2021ம் தேதி தமிழ்நாட்டில் ஒரே நாளில் 36987 நபர்கள் கொராணா நோயினால் பாதிக்கப்பட்டு இந்திய அளவில் தமிழ்நாடு மாநிலம் 4வது இடத்தில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மின்னணு கடவுச்சீட்டு இல்லாமல் ஒரு நபர் மற்றொரு மாவட்டத்திற்கு செல்லமுடியாது என்றாலும் அவ்வாறு செல்ல முயற்சித்தால் அந்த நபர்கள் மீது காவல்துறை வழக்கு பதிவு செய்யும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2021ம் வரும் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை கொராணா தமிழ்நாட்டில் உச்சககட்டத்தில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

22) மேற்படி காலக்கட்டத்தில் பொது நிகழ்ச்சிகளோ கூட்டங்களோ தமிழக அரசால் தடை உத்தரவு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருமண நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகளில் 20 நபர்களுக்கு மேல் கலந்து கொள்ளக்கூடாது என்று தமிழக அரசால் தடை உத்தரவு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த காலக்கட்டத்தில் காதணி விழாவிற்கு தமிழக அரசு அனுமதியும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. திருமண நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகளில் 20 நபர்களுக்கு மேல் கலந்து கொண்டால் அவர்கள் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

23) 29.04.2021ம் தேதி நான் நடத்தியதாக சொல்லப்படும் காதணி விழாவிற்கு முதுகுளத்தூர் காவல் நிலையத்திற்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்றால் பெறப்பட்டது. அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எதிரிக்கு என்னை நிறம், உருவமைப்பு தெரியாது என்றாலும், எதிரி என்னிடம் ஒருபோதும் கடன் கேட்டது கிடையாது என்றாலும் நான் கடன் கொடுத்தது என்றாலும், எனது வீட்டில் வந்து பணம் பெற்றுக்கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றாலும் சரியல்ல.

24) எதிரி நயினார் அவர்களிடம் ரூ.4,50,000/- கடன் பெற்றிருந்தார் என்றாலும் அதற்கு ஆதரவாக நிரப்பப்படாத மூன்று காசோலைகளில் கையொப்பம் செய்தும், நிரப்பப்படாத ரூ.50/- பத்திரங்களில் கையொப்பம் செய்து கொடுத்திருந்தார் என்றும், மேற்படி கடனை எதிரி திருப்பி செலுத்தி விட்டார் என்றாலும், இரண்டு காசோலைகளையும் ரூ.50/- பத்திரத்தை நயினார் எதிரியிடம் கொடுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல.

25) மேற்படி ஒரு காசோலையை வைத்து நயினார் அவர்கள் அவரின் மகளின் மாமனார் ஆன ஐ.சோமசுந்தரம் என்பவர் மூலம் சாத்தான்குளம் வழக்கறிஞர் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் எதிரி அதற்கு தகுந்த பதில் அறிவிப்பு அனுப்பியதால் மேற்படி ஐ.சோமசுந்தரம் அவர்கள் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நயினார் அவர்கள் தங்கிருந்த வீட்டின் உரிமையாளர் கோட்டிமுத்துவின் மகன் மணிகண்டன் என்பவரிடம் எதிரி குடும்ப அவசர நிமித்தமாக பெற்ற கடனுக்கு ஆதரவாக கொடுத்த நிரப்பப்படாத காசோலைகளில் ஒன்றை மணிகண்டன் மற்றும் நயினாரின் மகன் எனது மூலமாக கொடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

26) இந்த வழக்கில் காசோலைக்குரிய வங்கி கணக்கு 2017ம் ஆண்டே முடிக்கப்பட்டது என்ற விவரம் நன்கு தெரிந்து கொண்டே மணிகண்டன் மற்றும் நயினாரின் மகன் ஆகியோர் மூலமாக என்னால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மணிகண்டன் மற்றும் நயினாரின் மகன் விக்னேஷ் ஆகியோர் ரெங்கசாமியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு இந்த எதிரி மீது திருநெல்வேலி 3வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ரூ.25,00,000/- பணம் கேட்டு அசல் வழக்கு எண்.101/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

27) செல்வின் சார்லஸ் என்பவர் மேற்படி மணிகண்டனிடம் இருந்து பணம் வேண்டி திருநெல்வேலி மாவட்ட குற்றப்பிரிவில் கொடுத்த புகாரில் மேற்படி மணிகண்டன் எதிரியின் காசோலையை சம்பந்தமே இல்லாமல் கொடுத்து கஷ்ட நஷ்ட படுத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மணிகண்டன் மீது இந்த எதிரி கொடுத்த புகார் மனு மீது காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கோரி திருநெல்வேலி குற்றவியில் நடுவர் எண்.1ல் பல்வகை மனு எண்.30143/2023 வழக்கு தாக்கல் செய்து மனு நிலுவையில் இருந்து வருகிது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

28) நயினாரின் மகன் விக்னேஷ், மணிகண்டன் மற்றும் நான் ஆகியோர் கூட்டாக வட்டி தொழில் செய்து வருகிறோம் என்றாலும் அவர்களுக்கு ஆதரவாக நான் எதிரி யாரேன்றே தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு முதுகுளத்தூர் எங்கு உள்ளது என்றும் எனது வீடு எங்கு உள்ளது என்றும் என்னையும் யாரென்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ரூ.8,75,000/- பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

29) எதிரிக்கு நான் பணம் கொடுத்தாக குறிப்பிடும் நாளில் இருந்து 10.01.2024 வரை எந்தவிதமான எதிரி மீது எடுக்கவில்லை என்றால் சரிதான் எனது மாமனார் மூலமாக கேட்டுகொண்டு இருந்தேன். நான் எந்தவிதமான பணமும் எதிரிக்கு கொடுக்காததால் தான் எதிரியின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் மாமனார் மூலமாக பணம் கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எதிரியிடம் பலமுறை நேரிலும் செல்போன் மூலமாகவும் பணம் திரும்ப கேட்டதாக சொல்லக்கூடிய தேதிகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

30) நயினார் மூலமாக எதிரி எனக்கு பழக்கம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி எனக்கு யார் என்று தெரியாது என்றால் சரியல்ல.